## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில், சென்னையில் இரண்டாவது நாளாக

# தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு கருத்துக் கேட்புக் கூட்டம்!

### பல்வேறு சமுதாயப் பிரதிநிதிகள், பத்திரிகையாளர் சங்கங்கள், பொதுமக்கள் பங்கேற்பு!







சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கருத்து கேட்புக் கூட்டம் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் நடைபெற்றது. தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தலைவர், கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர்கள் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, தி.மு.க. செய்தித்தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில், நெட்வொர்க்கர்ஸ் வெல்பேர் அசோசியேஷன், முஸ்லிம் உரிமை பாதுகாப்பு கழகம், அனைத்து தலித் கிறிஸ்தவர்கள் சமூக நீதிக்கான கூட்டமைப்பு, தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் மற்றும் சமுதாய பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு, தங்களது கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர். அப்போது பேசிய கனிமொழி கருணாநிதி, மக்களோடு தொடர்ந்து பணியாற்றக்கூடிய சமூக அமைப்புகளின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் ஆர்வத்துடன் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

## கலைஞர் வழியில் நம் தலைவர் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செய்து வருகிறார்:

# ‘ஒவ்வொரு வாக்கும் உதயசூரியன் சின்னத்துக்கு வர வேண்டும்’ என்ற முடிவுடன் மகளிர் அனைவரும் செயல்படுங்கள்!

## தஞ்சை மாவட்டம், செங்கிப்பட்டி – கலைஞர் சிலை திறப்புவிழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

தஞ்சை,பிப்.7-

தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் தெற்கு ஒன்றிய கழகம் சார்பில், செங்கிப்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலையை நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இதில் கழக முன்னணியினர் மற்றும் ஏராளமான பெண்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அப்போது அவர், ``ஒவ்வொரு வாக்கும் உதயசூரியன் சின்னத்துக்கு வர வேண்டும் என்ற முடிவுடன் உங்களுடைய தேர்தல் பணிகளை இங்கே வந்திருக்கக்கூடிய மகளிராகிய நீங்கள் சிறப்பாகச் செய்யவேண்டும்” என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கலந்துகொண்டு கலைஞரின் சிலையைத் திறந்து வைத்திருக்கிறேன். இருந்தாலும், இந்த நிகழ்ச்சி என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. ஏனென்றால், கலைஞர் பிறந்த இந்த தஞ்சை மாவட்டத்தில் கலைஞரின் சிலையைத் திறக்கின்ற வாய்ப்பை இன்றைக்கு பெற்றிருக்கிறேன். வாய்ப்பளித்த மாவட்டக் கழகச் செயலாளருக்கும், மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும், ஒன்றியச் செயலாளருக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சொத்தில் சம உரிமை

இன்று கலைஞரின் சிலையை தமிழ்நாடு முழுதும் நாம் திறக்கிறோம் என்றால், கலைஞரின் கொள்கையை, சாதனையை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்க்கிறோம் என்று அர்த்தம். கலைஞர் அவர்கள் ஒரு வரலாற்றுப் பதிவு. அவர் யாராலும் முறியடிக்க முடியாத சாதனைகளைச் செய்தவர். இன்று நீங்கள் தாய்மார்கள் இந்த நிகழ்ச்சிக்கு இவ்வளவு பேர் கூடி எழுச்சியுடன், மகிழ்ச்சியான முகத்துடன் வந்திருக்கிறீர்கள். தன்னுடைய ஆட்சி நடக்கும் போதெல்லாம், இளம்பெண்களுக்கு, தாய்மார்களுக்கு, மகளிருக்கு எனப் பார்த்துப் பார்த்துத் திட்டங்களைச் செய்தவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை கொடுத்த முதல் முதலமைச்சர் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

### மகளிருக்கான அரசு

பெண்களுக்குக் காவல்துறையில் பணி புரியும் வாய்ப்பைக் கொடுத்தது இந்தியாவிலேயே முதல் முதலமைச்சர், முதல் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் இன்று நம்முடைய தலைவர் அவர்கள், பெண்களுக்கு ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு வருகிறார். அதனால்தான் இன்று நம்முடைய அரசை ‘திராவிட மாடல் அரசு’ என்று நாம் பெருமையாகச் சொன்னாலும், ‘மகளிருக்கான அரசு’ என்று மற்ற மாநிலங்கள் எல்லாம் நம்முடைய அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அதே நாள் நம்முடைய கழகத் தலைவர் போட்ட முதல் கையெழுத்து, மகளிருக்கான விடியல் பயணத் திட்டம், மகளிருக்கான கையெழுத்துதான். அதுமட்டுமல்லாது பல்வேறு திட்டங்கள். பெண்குழந்தைகள் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, தொடர்ந்து கல்லூரி படிக்க வேண்டும் என்று, அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை ‘புதுமைப்பெண் திட்டம்’ மூலம் மாதம் 1,000 ரூபாய் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுக்கிறார்.

### 22 லட்சம் குழந்தைகள்

மாதந்தோறும் ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்ற வகையில், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்ற நம்முடைய தேர்தல் அறிக்கையில், நாம் சொன்ன வாக்குறுதி ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்’. இன்று ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் ஊக்கத்தொகையாக, மகளிர் உரிமைத் தொகையாக நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் மகளிருக்குப் பயனுள்ள வகையில், நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

இங்கே வந்திருக்கக்கூடிய மகளிர் உங்களிடத்திலே நான் கேட்டுக்கொள்வது, நம்முடைய ஆட்சி தொடர வேண்டும். சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. நிச்சயம் 10 நாட்களுக்கு முன்பு, இதே தஞ்சை மாவட்டத்தில் ஒரு மகளிர் மாநாட்டை ஒட்டுமொத்த இந்தியாவே வியந்து பார்க்கும் அளவுக்கு ஒரு எழுச்சியான மாநாட்டை நீங்கள் நடத்திக் காட்டினீர்கள். அப்பொழுதே இந்தத் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்துத் தொகுதிகளிலும் நம் உதயசூரியன் சின்னத்தில் வெற்றி பெறப்போவது உறுதி என்பது முடிவாகிவிட்டது.

### பிரச்சாரப் பணிகள்

மீண்டும் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம்தான், நம்முடைய தலைவர்தான் முதலமைச்சராக அமரப் போகிறார். தேர்தலுக்கான பிரச்சாரப் பணிகளை இங்கே வந்திருக்கக்கூடிய தாய்மார்கள் அடுத்த இரண்டு மாதம் நீங்கள் களத்தில் இறங்கி, நம் அரசின் திட்டங்களை மக்களைச் சந்தித்து ஒவ்வொருவராக நீங்கள் எடுத்துக்கூற வேண்டும். ஒவ்வொரு வாக்கும் உதயசூரியன் சின்னத்திற்கு வர வேண்டும் என்ற முடிவுடன் இங்கே வந்திருக்கக்கூடிய மகளிர் உங்களுடைய தேர்தல் பணிகளை நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் அனைவரும் இன்று கலைஞர் சிலைக்கு முன்பு அந்த உறுதிமொழி ஏற்று, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகர், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், வைத்திலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் களிமேடு செல்வம், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளரும் தாட்கோ தலைவருமான இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மாநகரக் கழகச் செயலாளரும் மாநகராட்சி மேயருமான சண். ராமநாதன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் இறைவன், கனகவல்லி பாலாஜி, மணிமாறன், புண்ணியமூர்த்தி, எல்.ஜி. அண்ணா, இளவரசி கருப்பையா, ஒன்றியச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில்வேந்தன், மாநகர அமைப்பாளர் வாசிம் ராஜா உள்பட பலரும் கலந்துகொண்டனர்.








மீண்டும் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம்தான், நம்முடைய தலைவர்தான் முதலமைச்சராக அமரப்போகிறார். தேர்தலுக்கான பிரச்சாரப் பணிகளை இங்கே வந்திருக்கக்கூடிய தாய்மார்கள் அடுத்த இரண்டு மாதம் நீங்கள் களத்தில் இறங்கி, நம் அரசின் திட்டங்களை மக்களைச் சந்தித்து ஒவ்வொருவராக நீங்கள் எடுத்துக்கூற வேண்டும். ஒவ்வொரு வாக்கும் உதயசூரியன் சின்னத்திற்கு வர வேண்டும் என்ற முடிவுடன் இங்கே வந்திருக்கக்கூடிய மகளிர் உங்களுடைய தேர்தல் பணிகளை நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.